www.tamilarangam.net

# நாயா!

ஒரு உண்மை மனிதனை தோழனே இழந்தோம்
உன்னோடு எம் தோழர் பன்னிருவரை இழந்தோம்
உன் சிந்தனையை...... செயலாற்றலை
மக்கள்பால் நீ கொண்டிருந்த
நேயத்தை..... .........



வஞ்சகச் சன்னங்கள்
துளைத்துச் சிதைச்சுச்
செல்ல....... ......
இரத்த வெறி
கொண்ட புலிகளின்
கொலை வெறிக்கு
இரையானாய் ........
தர்மம் இப்போதும்
தலை குனிந்த படியே.......
நம்பிக்கை கழுத்தறுத்து
மல்லாந்து கிடந்தபடி
காறி உமிழ்கின்ற காரணங்கள்
வருகிறது......... .....
தூ! துரோகிகளின் துப்பலில் கூட
விஷம்.

- தோழர்கள் -

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## விடுதலைப் பறவை நாபா

இந்த விடுதலைப் பறவையின்
இமைகள்
மூடிவிட்டனவா — இல்லை.
மூடப்பட்டன.

இதயமில்லா இராட்சதர்
பாசிஸ அசுரர்
இரத்த வெறியின்
குத்தகைக்காரர் — புலிகள்
புரிந்த கொடுமையில்
இமைதான் மூடின,

இந்தப் புரட்சிப் பறவையின்
இதயம்
என்றும் விழித்திருக்கும் — அதன்
சுதந்திர கீதம்
விடுதலைப் போரினில்
கலந்தொலிக்கும்,

ஈழ மண் வாசனையிலும் — இனி
இப்பறவையின் நேசமும்
கலந்தே வீசும்
பரந்து விரிந்த இதன்
சிந்தனைச் சிறகு
பாட்டாளி மக்களுக்கு
நிழலாகும்.

இது நிஜமாகும் — நாம்
நிஜங்களைத் தூக்குபவர்கள்
நிதர்சனப் பார்வையில்
வளர்ந்தவர்கள் — எமை
வளர்த்த இப்பறவையின்
கீதத்தை மீண்டும் — மீண்டும்
மீட்டியே தீருவோம்.

ஆம் இந்தப் பறவையின்
இமைகள் மூடவில்லை.
எம் இதயங்களில்
விழித்திருக்கிறது — ஈழ
விடுதலையைக்காண
விழித்தே இருக்கிறது.

## "சென்னைப் பூவே"

தமிழ் மணக்கும்
சென்னைப்பூவே — உன்
எழிற் கோலத்தை
எங்கள் தோழர்களின் குருதிகள்
களங்கப் படுத்திவிட்டதா?
கவலைப் படுகின்றாயா?
அந்தக் குருதிகளில் — ஈழ
மக்களின் கண்ணீரும்
கலந்திருக்கின்றன.
கலந்தே இருக்கின்றன.

மக்களை நேசித்த எங்கள்
புரட்சிச் சூரியனின்
கருத்துக் கதிர்கள் — ஈழ
மக்களின் இதயக் கமலத்தை
மலர்விக்கும் என்று
காத்திருந்தோம்.
இயந்திர இதயங்கள் சுமக்கும்,
இரத்த வெறிப்புலிகள் செயலால்
சென்னைப் பூவே — நீ
களங்கப்பட்டு விட்டாய் — நாம்
கண்ணீர் சிந்துகின்றோம்.
கண்ணீர் சிந்துகின்றோம்.

இந்தப் புரட்சிச் சூரியனின்
கதிர்கள் பட்ட இடமெல்லாம்
கருக்கள் முகிழ்விட்டு
முனைத்திருப்பதை நீ அறிவாயா?
ஈழ விடுதலை யாகக்குண்டத்தின்
தீச்சுவாலைக் கனல்
தேசமெங்கும் வீசும் — அப்போ
சென்னைப் பூவே செந்தமிழே — நீ
மகிழ்வாய் ஈழத்தமிழரும் — உன்
சோதரப் பூதானே எம்
புரட்சித் தோழன் — நாபா,
சொன்னதும் அதுதானே.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி - பிரான்சு தோழர்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்